# மெட்ரோ ரயில் நிலையங்களில் இலவச மருத்துவ முகாம்

சென்னை, பிப். 22: பயணிகள் வசதிக்காக, சென்னையில் உள்ள12 மெட்ரோ ரயில் நிலையங்களில் இலவச மருத்துவ முகாம் பிப்ரவரி 24-ஆம் தேதி முதல் பிப்ரவரி 28-ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.

மெட்ரோ ரயில் பயணிகள் மற்றும் பொதுமக்கள் வசதிக்காக இலவச மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மெட்ரோ ரயில் நிறுவனம், அப்போலோ மருத்துவமனை ஆகியன இணைந்து முகாமை நடத்துகிறது.

இந்த முகாம் சென்ட்ரல், ஏஜி டி.எம்.எஸ்., சைதாப்பேட்டை, ஆலந்தூர், எல்.ஐ.சி., திருமங்கலம், வடபழனி, வண்ணாரப்பேட்டை, ஈக்காட்டுதாங்கல், ஆயிரம் விளக்கு அண்ணாநகர் கோபுரம், ஷெனாய் நகர் ஆகிய 12 மெட்ரோ ரயில் நிலையங்களில் பிப்ரவரி 24- ஆம் தேதி முதல் பிப்ரவரி 28-ஆம்தேதி வரை காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும், மாலை 4 மணி முதல் இரவு 7 மணி வரையும் நடைபெறவுள்ளது.